3196

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

කර්ණාටක සංගීතය I
கர்நாடக சங்கீதம் I
Carnatic Music I

55 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
*Two hours*

**கவனிக்க:**

- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
- ※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- ※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. ஔடவ ஷாடவ இராகங்களுள் ஒன்று
   (1) பிலஹரி (2) மலஹரி (3) ஆரபி
   (4) சுத்தஸாவேரி (5) ஹம்ஸத்வனி

2. திருக்குறுந்தொகை என்னும் பதிகத்தைப் பாடியவர்
   (1) திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் (2) திருநாவுக்கரசு நாயனார்
   (3) சுந்தரமூர்த்தி நாயனார் (4) மாணிக்கவாசக சுவாமிகள்
   (5) அருணகிரிநாதர்

3. சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம் என்னும் ஸ்வரங்களை எடுத்துக் கொள்ளும் மேளகர்த்தா சக்கரங்கள் முறையே
   (1) 3 ஆவதும் 9 ஆவதும் ஆகும். (2) 5 ஆவதும் 8 ஆவதும் ஆகும்.
   (3) 4 ஆவதும் 10 ஆவதும் ஆகும். (4) 6 ஆவதும் 12 ஆவதும் ஆகும்.
   (5) 5 ஆவதும் 9 ஆவதும் ஆகும்.

4. "ராதாவதன" என்ற அஷ்டபதி அமைந்துள்ள இராகம்
   (1) நாட்டைக்குறிஞ்சி (2) பைரவி (3) கானடா
   (4) மத்யமாவதி (5) ஸுருட்டி

5. மணிப்பிரவாள நடையில் அமைந்த உற்சவ பிரபந்தத்தை இயற்றிய வாக்கேயகாரர்
   (1) தியாகராஜ சுவாமிகள் (2) முத்துஸ்வாமி தீக்ஷிதர்
   (3) ஸ்வாதித்திருநாள் மகாராஜா (4) சியாமாசாஸ்திரிகள்
   (5) புரந்தரதாஸர்

6. "கல்லூர்ப் பெருமணம்" என்னும் தேவாரம் அமைந்துள்ள பண்
   (1) கொல்லிக் கௌவாணம் (2) வியாழக்குறிஞ்சி (3) ஸாதாரி
   (4) மேகராகக்குறிஞ்சி (5) அந்தாளிக்குறிஞ்சி

7. ஜால், திரிதால், பாஷ்டோ போன்ற புதிய தாளங்களை இசைக்கு அறிமுகப்படுத்தியவர்
   (1) அமிர் குஸ்ரு (2) மொஸாட் (3) பாக்
   (4) பீதோவன் (5) தான்ஸேன்

8. 'ஸ்யாஹி' எனப்படும் கறுப்புப்பசை நிரந்தரமாகப் பூசப்பட்டிருக்கும் வாத்தியம்
   (1) தவில் (2) தபேலா (3) மிருதங்கம்
   (4) ஸாரங்கி (5) நாதஸ்வரம்

9. மூர்ச்சனை கமகத்திற்கு உதாரணம்
   (1) ஸ்நிதபமகரிஸ (2) ஸ்நி நித தப பம (3) ஸகா ஸமா ஸபா
   (4) ஸரி ரிக கம மப (5) கமபதநிஸ்ரீ

10. "வலசி வச்சி" என்னும் நவராகமாலிகா வர்ணத்தின் முக்தாயிஸ்வரம் அமைந்துள்ள இராகங்கள் முறையே
    (1) சங்கராபரணம், பேகட (2) பிலஹரி, கல்யாணி (3) மோகனம், காம்போஜி
    (4) கல்யாணி, பேகட (5) காம்போஜி, பேகட

[பக். 2 ஐப் பார்க்க

11. A - திருக்கோடிக்காவல் என்னும் கிராமத்தில் பிறந்தார்.
B - மஹாராஜபுரம் விஸ்வநாதய்யரை 3 ஆவது குருவாகக் கொண்டவர்.
C - கேரள பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்.
D - மதுரல பிரவீணா என்னும் பட்டத்தைப் பெற்றவர்.

மேற்கூறப்பட்ட கூற்றுகளுக்குப் பொருத்தமான இசையறிஞர்
(1) செம்பை வைத்தியநாத பாகவதர் (2) செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயங்கார்
(3) அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் (4) மைசூர் சௌடையா
(5) மைசூர் வாஸுதேவாச்சாரியார்

12. அட்சரகால எண்ணிக்கை 15 ஐ உடைய அங்கம்
(1) குருத்ருத விராமம் (2) லகுத்ருத விராமம் (3) புலுதத்ருத விராமம்
(4) காகபாதம் (5) குருவிராமம்

13. ஓர் இராகத்தில் பல தடவைகள் உச்சரிக்கப்படும் ஸ்வரம்
(1) வின்னியாசம் (2) மந்தரம் (3) அம்சம் (4) பகுத்துவம் (5) சன்னியாசம்

14. A - 3 – 3½ அடி நீளமுடையது.
B - "ஸஹாப் அப்துல்லாகான்" என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
C - 16 – 22 மெட்டுக்கள் பலகையில் பொருத்தப்பட்டிருக்கும்.
D - எல்லாத் தந்திகளும் உலோகத்தால் ஆனவை.
E - வாசிக்கும் தந்திகள் ஏழு உண்டு.

மேல்வரும் கூற்றுகளுள் ஸரோட் வாத்தியத்துக்குப் பொருத்தமானவை
(1) BCD (2) ABC (3) ACD (4) ABD (5) CDE

15. பதங்களில் உணர்த்தப்படும் உயர்ந்த கருத்தாகிய ஜீவாத்மா, பரமாத்மா உறவினில் ஜீவாத்மா எனப்படுவது
(1) நாயகன் (2) தோழி (3) நாயகி (4) குரு (5) தாஸன்

16. திருவம்மானை என்ற பாடல் வகை
(1) திருப்புகழ் (2) தேவாரம் (3) திருவாசகம் (4) திருப்பல்லாண்டு (5) திருவிசைப்பா

17. தனது தாய்மொழியாகிய கன்னடத்தில் ஒரே ஒரு கிருதியை மட்டுமே இயற்றிய வாக்கேயகாரர்
(1) புரந்தரதாஸர் (2) முத்துஸ்வாமி தீக்ஷிதர்
(3) பைடால குருமூர்த்தி சாஸ்திரி (4) மைசூர் வாஸுதேவாச்சாரியார்
(5) க்ஷேத்ரக்ஞர்

18. சுத்த மத்திமம் அன்னியஸ்வரமாக ஒலிக்கும் ராகம்
(1) கீரவாணி (2) ஹிந்துஸ்தான் பெஹாக் (3) சுத்தஸாவேரி
(4) ஹமீர் கல்யாணி (5) ஆனந்தபைரவி

19. பைடால குருமூர்த்தி சாஸ்திரிகளின் முத்திரை
(1) பைடாலு (2) குருமூர்த்தி (3) வேங்கட (4) பைடால குரு (5) பத்மநாப

20. A - இசையின் எல்லா நுட்பங்களையும் கையாள ஏற்ற வாத்தியம்.
B - திறந்த வெளிகளிலும் இசைப்பதற்கேற்ற வாத்தியம்.
C - சுருதிக்காக 'ஒத்து' என்ற வாத்தியம் சேர்த்து உபயோகிக்கப்படுகிறது.
D - 2½ ஸ்தாயிவரை வாசிக்கக்கூடிய வாத்தியம்.

மேற்கூறப்பட்ட கூற்றுகளுக்குப் பொருத்தமான வாத்தியம்
(1) தம்புரா (2) வயலின் (3) தவில் (4) நாதஸ்வரம் (5) மிருதங்கம்

21. இலட்சண கீதத்தின் சூத்திர காண்டத்தில் வருவது
(1) அந்த இராகத்திற்கு ஒப்பான ஏனைய இராகங்களின் பெயர்கள் ஆகும்.
(2) அந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் ஆகும்.
(3) அந்த இராகத்தின் தாய் இராகத்தில் பிறந்த பாஷாங்க இராகங்களின் பெயர்கள் ஆகும்.
(4) அந்த இராகத்தில் பிறந்த உபாங்க இராகங்களின் பெயர்கள் ஆகும்.
(5) அந்த இராகத்தில் பிறந்த ஔடவ இராகங்களின் பெயர்கள் ஆகும்.

22. 11 அல்லது 12 அனுதாபத்-தந்திகளையுடைய வாத்தியம்
(1) பேஸ்கிற்றார் (2) ஸரோட் (3) ஸிதார் (4) ஸாரங்கி (5) வீணை

[பக். 3 ஐப் பார்க்க

23. அருணகிரிநாதர் வாழ்ந்த காலப் பகுதி
(1) 13 – 14 ஆம் நூற்றாண்டு (2) 14 – 15 ஆம் நூற்றாண்டு
(3) 15 – 16 ஆம் நூற்றாண்டு (4) 16 – 17 ஆம் நூற்றாண்டு
(5) 17 – 18 ஆம் நூற்றாண்டு

24. மேலைத்தேய சங்கீதத்தில் பிரதிமத்திமத்தைக் குறிப்பது
(1) A - Flat (2) B - Flat (3) D - Flat (4) E - Flat (5) F - Sharp

25. 20 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த புகழ்பெற்ற புல்லாங்குழல் விற்பன்னர்
(1) திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை (2) பாலமுரளி கிருஷ்ணா
(3) டி. ஆர். மகாலிங்கம் (4) லால்குடி ஜெயராமன்
(5) குன்னக்குடி வைத்தியநாதன்

26. நடுவில் அகன்றும் இரு பக்கங்களும் குறுகியும் செல்லும் அமைப்பையுடைய யதி
(1) விஷமயதி (2) கோபுச்சயதி (3) ஸ்ரோத்தோவஹயதி
(4) டமருயதி (5) மிருதங்கயதி

27. "ஸங்கரி ஸங்குரு" என்ற ஸாவேரி இராக திவிதாளக் கிருதியை இயற்றியவர்
(1) சியாமாசாஸ்திரிகள் (2) புரந்தரதாஸர்
(3) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (4) மைசூர் வாஸுதேவாச்சாரியார்
(5) தியாகராஜ ஸ்வாமிகள்

28. ஹிந்துஸ்தானி இசையில் 14 மாத்திரைகளைக் கொண்ட தாளம்
(1) திரிதால் (2) ஜப்தால் (3) தீப்சந்தி (4) தாதரா (5) தீன்தால்

29. "நிதிசால சுகமா" என்ற கல்யாணி இராக க்ருதியைப் பாடியவர்
(1) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (2) சியாமாசாஸ்திரிகள்
(3) தியாகராஜ ஸ்வாமிகள் (4) மைசூர் வாஸுதேவாச்சாரியார்
(5) புரந்தரதாஸர்

30. 22 வது மேளத்தின் ஜன்யமான ஔடவ வக்ர சம்பூர்ண இராகம்
(1) பைரவி (2) ஹிந்துஸ்தான் காபி (3) ஆபோஹி
(4) ஹிந்துஸ்தான் பெஹாக் (5) ஸ்ரீ ரஞ்சனி

31. 4 வது, 8 வது, 10 வது மேளச் சக்கரங்களின் பெயர்கள் முறையே
(1) வேத, வஸு, ருத்ர (2) வேத, ருது, திசி (3) அக்னி, ரிஷி, திசி
(4) வேத, வஸு, திசி (5) அக்னி, ருது, திசி

32. இராகாங்க இராக இலட்சண கீதங்களை இயற்றிய வாக்கேயகாரர்
(1) சாரங்க தேவர் (2) ஷேத்ரக்ஞர் (3) வேங்கடமகி
(4) கனம் கிருஷ்ணய்யர் (5) மைசூர் வாஸுதேவாச்சாரியார்

33. A - கி.பி. 1520 இல் பிறந்தவர்.
B - ராம்தானு பாண்டே என்னும் இயற்பெயரை உடையவர்.
C - மியான்-கி-தேஷ், மியான்-கி-மல்ஹார் போன்ற இராகங்களை அறிமுகப்படுத்தியவர்.
D - ரபாப் என்னும் வாத்தியத்தை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்.
மேற்கூறப்பட்ட கூற்றுகளுக்குப் பொருத்தமான வாக்கேயகாரர்
(1) பாத்கண்டே (2) தான்ஸேன் (3) அமிர் குஸ்ரு (4) மொஸாட் (5) பாக்

34. "அன்னமே என்ன செய்வேன்" என்ற தோடி இராகப்பாடலை இயற்றிய வாக்கேயகாரர்
(1) மைசூர் வாஸுதேவாச்சாரியார் (2) ஜெயதேவர்
(3) கனம் கிருஷ்ணய்யர் (4) மாரிமுத்தாப்பிள்ளை
(5) ஊத்துக்காடு வேங்கட ஸுப்பையர்

35. ஆரோகண அவரோகணத்தில் அன்னியஸ்வரத்தைக் கொண்டிராத பாஷாங்க இராகம்
(1) ஸ்ரீரஞ்சனி (2) காம்போஜி (3) ஸாரங்கா (4) பைரவி (5) கமாஸ்

36. சங்கீத ரத்னாகரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் குழல் வகைகளின் எண்ணிக்கை
(1) 8 (2) 10 (3) 12 (4) 14 (5) 16

37. ஒரே நேர்கோட்டில் எழுதப்படும் கர்நாடக சங்கீத லிபி முறையைக் குறிப்பது
(1) ஸ்டாவ் நொட்டேஷன் (Staff Notation) (2) ஸ்கிரிப்ட் நொட்டேஷன் (Script Notation)
(3) நாச்சுரல் (Natural) (4) ப்ளட் (Flat)
(5) ஷார்ப் (Sharp)

[பக். 4 ஐப் பார்க்க

38. திருமயிலைக் குறவஞ்சி என்ற நூலை வெளியிட்ட இலங்கைக் கலைஞர்
(1) என். கே. பத்மநாதன் (2) என். சண்முகரத்தினம்
(3) பீ. எஸ். ஆறுமுகம் பிள்ளை (4) வண்ணை. வி. காமாட்சி சுந்தரம்
(5) பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர்

39. தூத்துக்குடியில் நடைபெற்ற திருமுறை விழாவில் "இசைவல்லார்" என்ற பட்டத்தைப் பெற்ற இலங்கைக் கலைஞர்
(1) சண்முகரத்தினம் (2) தவில் தட்சணாமூர்த்தி
(3) குப்பிளான் செல்லத்துரை (4) புத்துவாட்டி. எஸ். என். சோமசுந்தரம்
(5) செல்வி. இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

40. சண்முகப்ரியா இராகத்தின் க, ப, த ஸ்வரங்களை கிரகபேதம் செய்யும்போது உண்டாகும் இராகங்கள் முறையே
(1) சித்ராம்பரி, சூலினி, தேனுக (2) நாடகப்ரியா, தேனுக, கீரவாணி
(3) சூலினி, தேனுக, சித்ராம்பரி (4) கீரவாணி, சித்ராம்பரி, சூலினி
(5) நடபைரவி, கீரவாணி, கல்யாணி

41. புறச்செவிக்கால்வாயின் கடைசியில் அமைந்துள்ள மென்சவ்வு
(1) நடுச்செவி மென்சவ்வு (2) செவிப்புற மென்சவ்வு
(3) செவிப்பறை மென்சவ்வு (4) பேசிலார் அடிமென்சவ்வு
(5) புறச்செவி மென்சவ்வு

42. இருவருக்குள் நடக்கும் வாக்குவாதத்தை சாகித்தியத்தில் கொண்டிருக்கும் பாடல்
(1) பிரவேசிக தரு (2) ஜக்கினித் தரு (3) சம்வாத தரு
(4) ஸ்வாகத தரு (5) உத்தர பிரதியுத்தர தரு

43. கீத கோவிந்தம் என்னும் காவியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்
(1) ஜே.சீ. பாக் (2) பார்டோலோமியா கிரிஸ்டோவோரி (3) மொஸாட்
(4) சேர் எட்வின் (5) பீதோவன்

44. பஞ்சலிங்க ஸ்தலக் க்ருதிகளை இயற்றிய வாக்கேயகாரர்
(1) முத்துஸ்வாமி தீக்ஷிதர் (2) தியாகராஜ ஸ்வாமிகள்
(3) மைசூர் வாஸுதேவாச்சாரியர் (4) கனம் கிருஷ்ணய்யர்
(5) சியாமாசாஸ்திரிகள்

45. மிஸ்ரஜாதி ஜம்பைதாளம் சங்கீர்ணகதி பேதமடையும்போது உண்டாகும் தாளங்களின் எண்ணிக்கை
(1) 63 (2) 72 (3) 90 (4) 99 (5) 108

46. தியாகராஜ ஸ்வாமிகளின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளில் கௌளை இராகத்தில் அமைந்த பாடல்
(1) ஜகதானந்த காரக (2) துடுகுகல (3) ஸாதிம் செனே
(4) கனகன ருசிரா (5) எந்தரோ மஹானு பாவுலு

47. நந்தனார் திரைப்படத்தில் வேதியராக நடித்த இந்திய இசைக்கலைஞர்
(1) லால்குடி ஜெயராமன் (2) வீணை பாலசந்தர்
(3) மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர் (4) குன்னக்குடி வைத்தியநாதன்
(5) மஹாராஜபுரம் சந்தானம்

48. ஒலியின் உரப்பினை அளவிடப் பயன்படுத்தப்படும் கருவி
(1) ஒலிமட்டமானி (2) அலைவுமானி (3) ஒலியலைமானி
(4) அலைவு காட்டி (5) இசைக்கவர்

49. வயலினில் தானம் வாசிக்கும்போது போடப்படும் வில்லின் அசைவு
(1) ஸ்வரவில் (2) ஜாரு வாசிப்பு (3) பிடிவாசிப்பு (4) சாகித்திய வில் (5) குதிப்புவில்

50. A - சிருங்கார ரஸத்தைக் கொண்டது.
B - 12 சர்க்கங்களையும் 24 பாட்டுக்களையும் கொண்டது.
C - கன்னட மொழியில் இயற்றப்பட்டது.
D - இராக தாள மாலிகையாகவும் அமைந்துள்ளது.
E - வடநாட்டிலும் தென்னாட்டிலும் பாடப்பட்டு வருவது.
மேலே தரப்பட்டவற்றுள் அஷ்டபதியின் இலட்சணங்களாக அமைந்திருப்பவை
(1) BCD (2) ABC (3) CDE (4) ABE (5) BCE

* * *

AL/2014/55/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

* **பகுதி I** இல் எவையேனும் **இரண்டு** வினாக்களையும், **பகுதி II** இல் எவையேனும் **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1. (i) ஜனக இராகத்தின் இலட்சணங்களைத் தருக.
(ii) ஜன்னிய இராகப் பிரிவில் **மூன்றினை** உதாரணத்துடன் விளக்குக.
(iii) திவிதீய கனபஞ்சக இராகங்களைக் குறிப்பிடுக.
(iv) இராகத்தின் **பத்து** இலட்சணங்களையும் தருக.

2. (i) இசைக் கருவிகளுக்கெல்லாம் 'அரசி' என அழைக்கப்படும் வாத்தியம் யாது ?
(ii) இவ்வாத்தியம் வாசிப்பதில் பிரபல்யமான வித்துவான்கள் **இருவரைக்** குறிப்பிடுக.
(iii) இவ்வாத்தியத்தின் தந்திகள் சுருதி கூட்டப்படும் முறையை விளக்குக.
(iv) இவ்வாத்தியத்தின் படத்தினை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுக.
(v) இவ்வாத்தியத்தின் அமைப்பை விளக்குக.

3. (i) 72 மேள கர்த்தாச் சக்கரத்தில் 9 ஆவது சக்கரத்தின் பெயர் யாது ?
(ii) அச்சக்கரத்தின் நேர் சுத்த மத்திமச் சக்கரத்தின் பெயர் யாது ?
(iii) 9 ஆவது சக்கரத்தில் இடம்பெறும் மேளங்கள், இராகங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
(iv) 9 ஆவது சக்கரத்தின் நேர் சுத்த மத்திமச் சக்கரத்தின் மேள எண், இராகம், ஸ்வரஸ்தானம் என்பவற்றைக் குறிப்பிடுக.

## பகுதி II

4. (i) "கீத வாத்யவினோத" என்ற விருதினைப் பெற்ற வாக்கேயகாரர் யார் ?
(ii) இவர் இயற்றிய **இரு** நூல்களைக் குறிப்பிடுக.
(iii) இவரது வாழ்க்கை வரலாற்றை எழுதுக.
(iv) இவர் இசை உலகிற்கு ஆற்றிய சேவையை விவரிக்குக.

5. பின்வரும் இராகங்களில் **இரண்டினைத்** தெரிவு செய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாக எழுதுக.
(உருப்படிகள், சஞ்சாரங்கள் எழுதப்படல் வேண்டும்.)
(i) பஞ்சசாமரம் என்னும் வர்ணமெட்டு அமைந்துள்ள ராகம்
(ii) ஆனந்தபைரவி
(iii) 29 ஆவது மேளத்தின் ஜன்யமான வக்ர ஷாடவ சம்பூர்ணராகம்
(iv) சாவேரி

6. (i) தாளதசப் பிராணங்களை வரிசைக்கிரமமாக எழுதுக.
(ii) தாளதசப் பிராணங்கள் **மூன்றினை** உதாரணத்துடன் விளக்குக.

7. சிறுகுறிப்பு எழுதுக.
(i) யமகம் (ii) திரிதால் (iii) அனுவாதி
(iv) சோடஷாங்கம் (v) மகுடஸாகித்யம்

8. கர்நாடக இசைக்கும் மேலைத்தேய இசைக்கும் இடையிலான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.
**அல்லது**
குரல்வளையின் தொழிற்பாடு பற்றி விளக்கி கர்நாடக இசைக்கு குரலிசையின் அவசியம் பற்றி விவரிக்குக.

* * *